கெட்டிங் பெடரேஷன் -ஐப் பற்றி என்று நினைக்கிறேன். சில புகார்கள் அரசுக்கு வந்திருக்கின்றன. பட்டு நூல் யாரிடமிருந்து வாங்கப்படுகிறதோ, அவர்களுக்கு உடனடியாகப்பணம் கொடுக்க வேண்டும் என்று இந்த அரசு உத்திரவு இட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு,—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற் றது என்பதைக் குறிக்கும்.]

[முற்பகல் 10-00]

2. உரிமைப் பிரச்னை மாண்புமிகு முதலமைச்சர் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை உரிமை மீறல் குறித்த பிரச்னை. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜேம்ஸ் அவர்களும், திரு. லத்தீப் அவர்களும் மாண்புமிகு முதலமைச் சர் அவர்கள்மீது பேரவையின் 184-வது விதியின்கீழ் 23-4-1979 அன்று பேரவையில் ஒரு அவை உரிமை மீறல பிரச்னையை எழுப்பினார்கள். அன்றே மாண்புமிகு முதலமைச் சர் அவர்கள் அதற்கு விளக்கம் அளித்தார்கள்.

திரு. ஜேம்ஸ் அவர்கள் கொடுத்த அறிவிப்பில் ''தனிப்பட்ட வர்களைப் பழி வாங்குவதற்காகவும் இந்திரா காந்தியை விசாரிப் பதற்காக நிறைவேற்றப்பட்ட சட்டம்'' என்று மாண்புமிகு முதல மைச்சர் அவர்கள் பேசியதாகக் குறிப்பிட்டிருந்தார். திரு. லத்தீப் அவர்கள் ''Cases against a single individual'' என்று தம் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்கையில் ''நான் பேசாத ஒன்றை நான் பேசியதாக உங்களுக்கு எழுதி என் மீது உரிமை மீறல் பிரச்னை கொண்டு வந்திருக்கிறார்கள். இப்போது அவர்கள் மீது உரிமைப் பிரச்னை கொண்டு வரலாமா என்று நான் யோசிக்கிறேன். ஏனெனில் சட்டமன்றத்தில் நான் உபயோகிக்காத வார்த்தைகளை உபயோகித்ததாகஅவர்கள் உண் மைக்கு மாறாக எழுதி தங்களிடம் கொடுத்து நான் உரிமை மீறியதாகச் சொன்னது எப்படி பொருத்தமுடையதாக இருக் கும் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை'' என்று கூறியுள்ளார்.

பேரவைக் குறிப்புகள் சட்டமன்றப் பேரவைத் துறை நூலகத்தில் வைக்கப்படுகின்றன. அவற்றை பார்த்து விட்டு மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த முன் அறிவிப்பைக் கொடுத்திருக்கலாம். அப்படிச் செய்யாதது வருந்தத்தக்கது.

1979 ஏப்ரல் 25] [பேரவைத் தலைவர்]

பேரவையில் அவர்கள் பேசும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சரியான பேச்சை எடுத்துக் கொண்டு அதில் அவை உரிமை மீறல் இருக்கிறது என்று வாதாடினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்கு விளக்கமாகப் பதில் அளித்துள்ளார்கள்.

ஸ்பெஷல் கோர்ட் சட்டம் தனிப்பட்ட சிலரைப் பழிவாங்கக் கொண்டு வரப்பட்டது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட வாக்கியம் தான் திரு. ஜேம்ஸ் அவர்களாலும் திரு. லத்தீப் அவர்களாலும் ஆட்சேபிக்கப்பட்டது. இக்கூற்று உண்மைக்குப் புறம்பானது என்று அவர்கள் வாதாடினார்கள். தாம் அளித்தது சரியான விவரம்தான் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கியுள்ளார்.

ஒரு சட்டம் என்ன காரணத்திற்காகக் கொண்டு வரப்பட்டது என்று எடுத்துக் கூற யாருக்கும் உரிமை உண்டு. எனவே அவ்வாறு கூறுவது தவறு, வேறு காரணங்களுக்காகத்தான் அச்சட்டம் கொண்டு வரப்பட்டது என்று கூறி, அதற்காக அவை உரிமை மீறல் பிரச்சினையை எழுப்புவது சரியல்ல.

தாம் கூறாத ஒன்றைக் கூறியதாக எழுதித் தம் மீது உரிமைப் பிரச்னை கொண்டு வந்ததுதான் அவை உரிமைமீறிய பிரச்னை ஆகும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆயினும் இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வற்புறுத்தவில்லை என்று நினைக்கிறேன். இம்மாதிரிப் பிரச்னைகளை எழுப்ப விரும்பும் மாண்புமிகு உறுப்பினர்கள் பேரவைக் குறிப்புகளைப் பார்த்து சரியான விவரம் தெரிந்து பின்னர் எழுப்புவது தான் முறை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, இங்கு எழுப்பப்பட்ட பிரச்னையில் அவை உரிமை மீறல் எதுவும் எழவில்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

திருப்பரங்குன்றம் சம்பவம் காரணமாக சில வழக்கறிஞர்கள் உண்ணாவிரதம் இருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :—" திருப்பரங்குன்றம்சம்பவத்தில் சம்பந்தப்பட்ட காவல்துறை அதிகாரியை தற்காலிக வேலை நீக்கம் செய்யக் கோரி, 20—4—1979 முதல் திரு. கே. வி. சங்கரன், திரு. ஜோதி ஆகிய வழக்கறிஞர்கள் ஹைகோர்ட் அருகில் உண்ணாவிரதமிருப்பதால் எழுந்துள்ள பதட்டமான நிலையைக் குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டு—

திரு. ஆர். உமாநாத், திரு. ஆர். கிருஷ்ணன், திரு. என். வரதராஜன், திரு. சி. கோவிந்தராசன், திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. என். பழனிவேல், திரு. மு. அம்பிகாபதி, திரு.